பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை 01.12.2023 கதிர் 385

# கடன் மறுசீரமைப்புக்கான இணக்கம் சர்வதேச சமூகத்திடமிருந்து கிட்டியது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று அறிவிப்பு

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சர்வதேச சமூகம் உத்தியோகபூர்வமாக இணங்கியுள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டின்கடன்மறுசீரமைப்பு தொடர்பில் செயற்பட சர்வதேச நிபுணத்துவத்துவமுடைய பிரான்ஸ் நாட்டு லாசார்ட் நிறுவனமும், சர்வதேச கடன் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த கையோடு ஆரவரமாகத் தொடங்கிய பெப்ரவரி 4க்குள் தீர்வு என்ன ஆச்சு என்றே தெரியவில்லை, அதன்பின்னர் 13இன் முழுமையான அமுல்படுத்துதல் என்று ஆரவாரம் காட்சிய பேச்சுக்களுக்கும் என்ன ஆனது என்று தெரியவில்லை, அதற்கும் மேலே 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தும் அனைத்துக்கட்சிக்கூட்டங்களுக்கும் என்னவாயிற்று என்று தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்கிய 13ஐ பலப்படுத்தி நிறைவேற்றும் வாக்குறுதிக்கும் என்ன நடந்தது ☞ 2

## பெற்றோல், டீசல் விலை நள்ளிரவு முதல் குறைப்பு

எரிபொருள் விலையில் இன்று நள்ளிரவு முதல் திருத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது.

ஒக்டேன் 92 பெற்றோல் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 346 ரூபாவாகும். ஒக்டேன் 95 பெற்றோல் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 426 ரூபாவாகும்.

லங்கா டீசல் 27 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 329 ரூபாவாகும். ☞ 2

# கடன் மறுசீரமைப்பு இணக்கம் மூலமாக நாணய நிதிய மீளாய்வு முடிவுக்கு வரும்

## பீற்றர் புருவர் தெரிவிப்பு

இலங்கையின்கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக கடன் வழங்குநர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப் பட்டுள்ள கொள்கைரீதியானஇணக்கப்பாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வை நிறைவு செய்ய உதவும் என சர்வதேச நாணயநிதியத்தின்இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் புரூவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வந்திருந்த அவர், இலங்கை எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்து நிலையான மற்றும் உள்ளடக்கிய மீட்சியை ஊக்குவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச நாணய நிதியம் உதவுவதற்கே இங்கு வந்துள்ளது, இலங்கைக்கு மிகவும் தேவையான தருணத்தில் அடுத்த நான்கு



வருடத்திற்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க சர்வதேச நாணயநிதியம் முன் வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# 5.9 பில்லியன் டொலர் கடன் மீளாய்வு செய்யப்படவுள்ளது

## நிதி அமைச்சு அறிவிப்பு

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பாரிஸ்கழகம் உள்ளிட்ட இலங்கையின் வெளிநாட்டு கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ சங்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ள கொள்கை ரீதியான இணக்கப்பாட்டிற்கு அமைவாக 5.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதி மீளாய்வுசெய்யப்படவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கொள்கை ரீதியிலான இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பாரிஸ்கழகம் உள்ளிட்ட இலங்கைக்கான கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ சங்கம் புதன்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்ததுள்ளமையை அடுத்து நிதியமைச்சு நேற்று விடுத்துள்ளஅறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பாரிஸ்கழகம் உள்ளிட்ட இலங்கைக்கான கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ சங்கம் அறிவித்துள்ளதன் பிரகாரம் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாடானது எதிர்காலத்தில் கடன் வழங்குநர்கள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் இருதரப்புஉடன்பாட்டின் ஊடாக அவர்களின் சட்ட மற்றும் நிபந்தனைகளுக்குஅமைவாக நடைமுறைப்படுத்தப்படும். ☞ 2

# அடுத்த 6 மாதங்களுக்குள் 9 லட்சம் சாரதி அனுமதிப் பத்திர விநியோகம்

விநியோகிக்க முடியாமல் போயுள்ள சாரதி அனுமதிப் பத்திரங்கள் அடுத்த 6 மாதங்களுக்குள் விநியோகிக்கப்படும்என்றுமோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விநியோகிக்கமுடியாமல் போயுள்ள வகையில் 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள்தேங்கியுள்ளன. சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு தேவையான அச்சு இயந்திரம் இல்லாத காரணத்தினால் இந்த நிலைமைஏற்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை, 3 புதிய அச்சு இயந்திரங்கள்கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே எதிர்வரும் காலத்தில் விரைந்துநடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்றார்.

# றொஷானுக்கு எதிரான மனு மீது ஆட்சேபனை அணைக்க அவகாசம்

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில், நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தார் என்றுமுன்னாள்விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்கவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான ஆட்சேபனைகளை தெரிவிக்க அவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

றொஷான் ரணசிங்கவிற்கு எதிராக சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்துள்ள குறித்த மனு நேற்றுமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அதனை சமர்ப்பிக்குமாறு ☞ 2

# வங்குரோத்து நிலையிலிருந்து டிசெம்பருக்குள் நாடு மீளும்

## நிதி இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து டிசெம்பர் மாதத்திற்குள் மீண்டுவிடும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவில் 17 நாடுகள் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளன. அதில் பிரான்ஸ், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தலைமைத்துவத்தினை வழங்கியுள்ளன. பாரிஸ்கழகமும், ☞ 2

# வங்குரோத்துக்கு யார் காரணம்? நாடாளுமன்றில் வாதப் பிரதிவாதம்

நாட்டை வங்குரோத்துக்குஉள்ளாக்கியது யார் என்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சியிடையே நேற்று வாதப் பிரதிவாதங்கள்ஏற்பட்டன.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சர்வதேசநாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக்கான கொடுப்பனவுகிடைப்பதுஉள்ளிட்ட தகவல்களை நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சபைக்கு அறிவித்ததை அடுத்துஎழுந்தஎதிர்க்கட்சி பிரதம கொராடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, "நாங்கள் இரண்டாவது தவணை கிடைப்பதைஇட்டுமகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் சர்வதேச நாணயநிதியம் உட்பட சர்வதேசநாடுகளிடத்தில் நாட்டைபிச்சைஎடுக்கம் அளவிற்குவங்குரோத்து அடையச்செய்தது நீங்களே(ஆளும் தரப்பு). இப்போது சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து தவணைக்கொடுப்பனவு கிடைப்பதை பெருவெற்றியாக காண்பிக்கின்றீர்கள். பிழையான தீர்மானங்கள் எடுத்த பொது மின்சாரத்தூண்கள் போன்று இருகைகளையும் உயர்த்தி ஆமோதித்து விட்டு நாட்டை பொருளாதார ரீதியாக குட்டிச்சுவராக்கிவிட்டு இப்போது நாட்டின்மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் ☞ 2

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் அரசியல் சக்திகளுக்கு தொடர்பு

## அரைவாசிக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் இதை நம்புகின்றனர்

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்றுநடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களுடன், உள்நாட்டு அரசியல் சக்திகள் தொடர்புபட்டுள்ளதாக இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும்மேற்பட்டோர், அதாவது 53 வீதமானோர் நம்புகின்றனர் என்று ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வெரிட்டே ரிசேர்ச் மற்றும் வான்கார்ட் சேர்வே ஆகிய ஆய்வு நிறுவனங்கள்இணைந்து மேற்கொண்ட ஆய்விலேயேமேற்கண்டவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த ஆய்வில் மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாவது,

கடந்த ஒக்டோபர் மாதம் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வின் போது, 2019 ☞ 2

# சுகாதார அமைச்சின் செயலரிடம் நேற்று சிஐடி வாக்குமூலம்

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தவிடத்தில் குற்ற விசாரணைத் திணைக்களம் வாக்குமூலம் பெற்றிருந்தது.

சுகாதாரத்துறையில் அவரது காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பில் செய்யப்பட்ட ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

என்று தெரியவில்லை.

மொத்தத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து எந்தச் சத்தமும் இல்லை. 2024 பிறக்க சரியான இன்னும் ஒரு மாதம் மட்டுமே உள்ளது. அது பிறந்ததும் தேர்தல் காய்ச்சல் தொடங்கிவிடும். அடுத்தடுத்து தேர்தல்கள் என்பதால் தீர்வுக்கான வாய்ப்புக்கள மிகக் குறைவே. இந்த நிலையில் ஏதாவது முன்னேற்றத்தை ஏற்படுத்த, சிறு நகர்வையாவது ஏற்படுத்த தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் முயற்சித்தார் என்று தெரிகின்றது. ஆனால், அதுவும் வெற்றிகரமாக அமையவில்லை.

தனது காலத்திற்குள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிடவேண்டும் என்று அவர் பிடிவாதமாக இருக்கிறார். அவரது உடல்நிலை ஒத்துழைக் காதுவிட்டாலும் இது விடயத்தில் அவரது எண்ணங்கள் இன்னும் தீவிரமாகவே உள்ளன. அதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித் தரச் சொல்லிக் கேட்டிருக்கின்றார் சம்பந்தன். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்மூலமேஅவர்இந்தச் சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கும் நகர்வுகளை மேற்கொண்டார்.

அவரும் அதற்கான முயற்சிகளை எடுத்தார். ஆனால், ரணில் தவிர்த்துவிட்டார். சந்திப்புக்கான நேரம் கேட்-டு சுமந்திரன் ரணிலை அணுகியபோது, தனக்குச் சிறு வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதால் அது மாறிய பின்னர் சந்திக்கலாம் என்று சொல்லியிருக்கிறார் ரணில். பின்னர் அவர் நேரம் ஒதுக்கிய போது சம்பந்தன் உடம்புக்கு முடியாமல் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டிருந்தார். இதனால் அந்தச் சந்திப்பு இதுவரையில் நடக்காமலேயே போய்விட்டது.

தனது காலத்திற்குள் இந்தப் பிரச்சினையை எப்படியாவது தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பது சம்பந்தனின் விருப்பம். ரணிலும்கூட அதனைப் பல தடவைகள் ஆமோதித்திருக்கிறார். தங்கள் இருவரது காலத்திற்குள்ளும் தீர்வைக் கண்டுவிடவேண்டும், அடுத்த தலைமுறைக்கு இந்தப் பிரச்னையைக்கையளிக்கக்கூடாது என்பதைப்பகிரங்கமாகவேசொலியிருக்கிறார். அதை நம்பித்தானோ என்னவோ சம்பந்தர் இன்னும் முயன்றுகொண்டிருக்கிறார். அதுவும்தவிர, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி குறித்தும் கேள்விகள் கணைகள் பாயத் தொடங்கிவிட்ட நிலையில், தான் பதவியிலிருந்து இறங்குவதுற்கு முன்னர் எதையாவது செய்ய வேண்டும் என்பது அவரது நினைப்பு. ஆனால் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

தேர்தலுக்கு முன்னர் சில பல பேச்சுக்கள் நடக்கக்கூடும். ஆனால், அவை எல்லாம் தீர்வுக்கான பேச்சுக்களாக இருக்காது. தேர்தலில் ஆதரவு பெறுவதற்கான வாக்குறுதிகளாக மட்டுமே இருக்கும். அப்படிப்பட்ட வாக்குறுதிகள்நிறைவேற்றப்பட்டதாக இலங்கை அரசியல் வரலாற்றில் சரித்திரமே இல்லை என்பதால் அடுத்தாண்டு மட்டும் அது சிறப்பாக நடந்துவிடக்கூடும்என்றுஎதிர்பார்க்க முடியாது.

ஆக மொத்தத்தில் ரணிலைப் பெரியளவில் நம்பிய சம்பந்தருக்கு ஏமாற்றத்தை மட்டுமே பரிசளிக்கப் பார்க்கிறார் ரணில்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை செலுத்தாததால் ஏற்பட்டுள்ள சட்ட விடயங்களைக் கையாள கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனமும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

கடன்வழங்குனர்களுடன்அவர்கள் விரிவாகக் கலந்துரையாடினர். ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கதனது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களின் போது ஜப்பான், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின்ஆதரவைஇதுவிடயத்தில் கோரினார்.

தற்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டை மேற்கொள்ள சர்வதேச சமூகம் உத்தியோகபூர்வமாக இணங்கியுள்ளது. அது ஒரு நாடாக நாம் பெற்ற வெற்றியாகும். நாடு மீண்டும் சுவாசிக்க ஒரு வாய்ப்புப் கிடைத்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் நாடளாவிய ரீதியில் நிறுத்தப்பட்டிருந்த திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும்.

ஒரு சில வீதிகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ளன. மேம்பாலங்கள் அமைக்கும் பணி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, இவ்வாறு நிறுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களும் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சுமார் 20 பில்லியன் ரூபா கடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் கடன் தொகை மூலம் நாடு முழுவதும் கிராமப்புறங்களில் உள்ள சேதமடைந்த மற்றும் பயணிக்க முடியாத வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன. அந்த வீதிகள் குறித்து ஆராயுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். அதன்படி, அடுத்த வாரத்திற்குள் வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

தொடருந்துப்பாதைகள், அதிவேகப் பாதைகள் குறித்து பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். செயற்திறன்மிக்க தொடருந்துப் பாதைகளைப் பெற, தொடருந்துத் தண்டவாளங்களை நவீனமயப்படுத்தவேண்டும். நான் இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்கும்போதுஇந்தியகடன்திட்டத்தின் கீழ் 160 தொடருந்துப் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இந்த பெட்டிகளுக்கான துறைமுக அபராதத் தொகையை செலுத்திய பின்னர்,123புகையிரதப்பெட்டிகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

யார் ஆட்சிக்கு வந்தாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் அடிப்படையில்தான் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படமுடியும். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் அளவுக்கு நமது நாட்டில் பொருளாதாரப் பலம் இல்லை. துறைமுகங்கள், விமான நிலையங்கள், வருமான வரித்திணைக்களம் உள்ளிட்ட அரச வருமானம் ஈட்டும் நிறுவனங்கள் அனைத்தையும்டிஜிட்டல்மயமாக்க வேண்டும். தற்போதுள்ள காலாவதியான செயற்பாட்டுப் பொறிமுறையுடன் தொடர்ந்து செல்ல முடியாது.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்று இலங்கையை மாற்றுவதற்குஅரசநிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குவது அவசியமாகும். இந்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொழில்நுட்ப மாற்றத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும் - என்றார்.

## ரொஷானுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றம், பிரதிவாதியான ரொஷான் ரணசிங்கவிற்கு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, இந்த மனு ஜனவரி 3 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மேன் முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதியை அவமதிக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டார் என்று தெரிவித்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் உள்நாட்டு அரசியல் சக்திகளுக்கு தொடர்புள்ளதாக 53 வீதமானோர் நம்புகின்றனர்.

இவர்களில் 30 வீதமானோர் உள்நாட்டு அரசியல் சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த இலங்கை தீவிரவாதிகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக நம்புகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உள்ளூர் அரசியல் சக்திகள் மற்றும் ஆபத்தான வெளிநாட்டுச் சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த இலங்கை தீவிரவாதிகளால் 2019 ஏப்ரல் 21 தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக நம்புவதாக 23 சதவீதமானோர் கூறியுள்ளனர்.

உள்நாட்டு அரசியல் சக்திகளின் தலையீடு இன்றி இது மேற்கொள்ளப்பட்டதாக 8 சதவீதமானோர் மாத்திரமே நம்புகின்றனர். 39 சதவீதமானோர் இது தொடர்பில் எவ்வித கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை என்று கூறியுள்ளனர்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 269 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

## வங்குரோத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுவது போன்று காண்பித்துக்கொள்வதை இட்டு வெட்கப்பட வேண்டும்'' என்றார்.

இதன்போது, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ''சாவதேச நாணய நிதியத்தின் திட்டம் வந்தபோது அதனை எதிர்த்தீர்கள். அதற்கு பிழைய அர்த்தங்களைவெளிப்படுத்தினீர்கள். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை தவறாக பிரசாரம் செய்தீர்கள். இப்போதுஅதுபற்றிப்பேசுகின்றீர்கள். அதற்கான தகுதியை இழந்துள்ள நீங்கள் எவ்வாறு கடன் தவணை மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் பேச முடியும்'' - என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி பிரதம கொராடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, ''நான் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை எதிர்த்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார். ஆனால் ஆட்சியாளர்களின் முன்னிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது, நான் இலங்கைக்கு பத்து ஆண்டுகள் கடன்மறுசீரமைப்பு வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டேன். நாம் அவ்வளவு மோசமானவர்கள் அல்லர்'' என்றார்.

தொடர்ந்து, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, "சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டாம் என்றும், அதனால்வழங்கப்பட்ட100 மில்லியன் டொலரை வேண்டாம் என்றும்நாம்கூறவில்லை. அதனை ஆட்சியாளர்களள. அதுமட்டுமனிற் 600 முதல் 700 மில்லியன் ரூபா வரிச்சலுகையை வழங்கி செல்வந்தர்களுக்கு வாய்ப்பளித்தது நாம் அல்ல. நாட்டை வங்குரோத்து அடையச் செய்தமைக்காக பொறுப்புக்கூற வேண்டிவர்களாக ஆளும் தரப்பினரையே உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. ஆகவே அவர்கள் தான் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்'' என்றார்.

இச்சமயத்தில், மீண்டும் எழுந்த நிதிஇராஜாங்கஅமைச்சர்ஷெஹான் சேமசிங்க, ''தலைமையை ஏற்றுக்கொண்டு விடயங்களை முன்னெடுக்குமாறு கூறியபோது, அதிலிருந்து தப்பிச் சென்றவர் தான் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர். அவ்வாறான நிலையில் இப்போது நாட்டின் தலைவர் எமது அரசாங்கத்துடன் சேர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். அவருக்குதுணையாக நாம் செயற்படுகின்றோம்'' என்றார்

## பெற்றோல், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பர் டீசல் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 434 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய்ஒருலீட்டர்2 ரூபாவால்குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலையாக 247 ரூபாயாக நிர்ணாயிக்கப்பட்டுள்ளது. அதன்படி சினோபெக் மற்றும் எல். ஐ. ஓ. சி. ஆகியனவும் எரிபொருள் விலைகளில்திருத்தம்செய்துள்ளன.

## 5.9 பில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப் பாட்டை கூடிய விரைவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப் படுகிறது. இந்த இணக்கப்பாடும் கடந்த மாதம் 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன எக்ஸிம் வங்கியுடன்ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடும், இலங்கையின் மொத்த இருதரப்பு வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்கு மிக முக்கியமானவையாக உள்ளன.

கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் சவுதி அரேபியா, பாகிஸ்தான், குவைத் மற்றும் ஈரான் உள்ளிட்ட 274 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வர எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக இலங்கையின் திறைசேரி முறிகள் உரிமையாளர்கள் உள்ளிட்ட ஏனைய வெளித்தரப்பு வணிகக் கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சமமான இணக்கப்பாட்டைஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இணக்கப்பாட்டில்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விடயங்கள், எதிர்காலத்தில் விரிவாக தெளிவுபடுத்தப்படவுள்ளன.

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பாரிஸ் கழகம் உள்ளிட்ட இலங்கைக்கான கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ சங்கம் தெரிவித்த இணக்கப்பாட்டின் ஊடாக சர்வதேச நாணய நிதியத்தில் இலங்கையுடன் தொடர்புடைய கடன் வேலைத்திட்டத்தில் 334 மில்லியன் அமெரிக்க டொலர் இரண்டாம் தவணைக்கான அனுமதியையும் விரைவில் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என்றுள்ளது.

## சுகாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகளுக்கு அமைவாகவே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

குறித்தவிசாரணையின்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், எமது நாடு தற்போது நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. இந்தக்காலப்பகுதியில் மருந்து கொள்வனவுகள் முன்னெடுக்கப்பட்டன.

புலத்த சிரமங்களுக்கு மத்தியிலும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட:டு சுகாதரத்துறை முன்னகர்த்தப்பட்டது. இந்தநிலையில் குறித்த வியடம் சமப்ந்தமாக பொலிஸார்என்னிடத்தில்விசாரணை செய்வதற்காக அழைத்திருந்தார்கள் என்றார்.

இதேநேரம், அவ்விடத்திற்கு வருகை தந்த இலஞ்சம் ஊழல், வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் குழுவினர் முன்னாள் செயலாளர் வெளியேறியே போத, திருடன்திருடன்என்றுகோசங்களை எழுப்பினார்கள்.

அத்துடன், முன்னாள்செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த பொறுப்புக் கூறவேண்டும். அவர் இந்த விடயத்தில்நடவடிக்கைகளைஅடுத்த கட்டமாக முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## வங்குரோத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓ.சி.சியில் உள்ள நாடுகளும், சீனாவும்கடன்மறுசீரமைப்புக்கான அடிப்படை இணக்கப்பாட்டை வழங்கியுள்ளன.

இதனால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை கொடுப்பனவை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதார மேம்பாடு தொடர்பில் நாம் அடுத்த வருமாகின்றபோது அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். அத்துடன்தனியார்கடன் வழங்குநர்களுடனும்பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளோம். இதுவரலாற்று முக்கியத்துவமான விடயமாகும்.

இதன்மூலமாக நாடு வங்குரோத்து நிலைமையில் இருந்து டிசெம்பர் மாததத்திற்குள் விடுபடுமென எதிர்பார்ப்பதோடு இரண்டாம் தவணைக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# முறைசாரா தொழிலில் ஈடுபடுவோருக்கு தனியான பிரிவு புதிய தொழில் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வகுக்கப்படும்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

நாட்டிற்குபொருத்தமானசிறந்தபிரஜைகள் ஆரம்ப பாடசாலைகளில் உருவாக்கப்பட வேண்டும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

1956 ஆம் ஆண்டு சிங்கள மொழி அரச கரும மொழியாக ஆக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்த நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக பல இனக்கலவரங்கள் ஏற்பட்டன. இவற்றுக்கு காரணம் நாட்டுக்கு ஏற்றபொருத்மான பிரஜைகள் உருவாக்கப்படாமையே. உலகத்தை பார்க்க முயலும் சிறு பிள்ளைகளுக்கான ஆரம்ப கல்வியை முன்னெடுக்கும் ஆரம்ப புள்ளிகள் தேவையான வழிகாட்டலுடன் வழிநடத்தப்படுவது அவசியம். இதில் ஆரம்ப பாடசாலைகளின் ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமானது. அதனால்தான் அவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் கனிவான வாழ்க்கையை வாழ வழிவகை செய்யும் அமைப்பை உருவாக்கி செயல்படுகிறோம். இதற்காகபுதியதொழில்பாதுகாப்புசட்டத்தின்கீழ் முறைசாராதொழிலில்ஈடுபட்டுள்ளவர்களுக்கு தனியானபிரிவுவகுக்கப்படும்என்றுமுன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாட லில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மூன்று மாதங்களுக்குள் முறைசார துறையிலுள்ள அனைவருக்கும் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். முதலானவற்றை எவ்வாறு வழங்குவதுமற்றும்சமூகபாதுகாப்புவேலைத் திட்டத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பானயோசனையைஅமைச்சரவைக்கு கையளிக்கவுள்ளோம். இதற்கமைவாகஇந்தத் திட்டத்தின் மூலம் உங்களைப்போன்ற 60 லட்சம் பேருக்கு ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். பெற முடியும். காப்புறுதி அடிப்படையிலான சமூகப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதற்காக செயல்பட்டுவருகின்றோம்.

நம் நாடு வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதற்கான ஒளிக்கீற்று தென்பட்டுள்ளது. எனவே அந்த இலக்கை நோக்கிச் செல்ல, நாம் இந்த பிள்ளைகளை முன்னெடுக்க வேண்டும். இன்னும் 15, 20 வருடங்களில் இந்தப் பிள்ளைகள் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வருவார்கள். உங்களால்தான் இந்தக் பிள்ளைகள் வலிமையடைவர்களாகவும் நன்றாகச் சிந்திக்கும் ஆற்றலையும் பெறுவார்கள்.

நாட்டில் முறைசாரா தொழில் துறையில் ஈடுபட்டுள்ளசுமார்60லட்சம்பேர்உரியதொழில் அங்கீகாரம் இல்லாதவர்கள், உரிய தொழில் பாதுகாப்பு இல்லாதவர்கள். அதனால் அவர்களுக்கு தொழில் கௌரவத்தை அளிக்கவும், அவர்களின் தொழிலுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திக்கொடுக்கவுமே 'கரு சரு' திட்டத்தை செயல்படுத்துகிறோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முறைசாராசேவையில்ஈடுபட்டுள்ளோரின் தொழில்கௌரவத்தை மேம்படுத்துவதற்கான 'கரு சரு' என்ற வேலைத்திட்டத்திற்கு பொது மக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கான தொடர் செயல் அமர்வின் 5 ஆவது அமர்வு வியாழக்கிழமைதொழில்மற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

முறைசாரா துறையில் பணியாற்றுபவர்களுக்கு தொழில் கௌரவத்தை வழங்குவதற்கும் ,அவர்களின் தொழில் ரீதியிலான நலன்கள் குறித்து நீண்ட காலமாக பேசப்பட்ட போதிலும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனாலேயே இதற்கு வழிவகை செய்யும் பொருட்டு 'கரு சரு' திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர்மனுஷநாணயக்காரதெரிவித்தார்.

'இங்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முறையான அமைப்பு உள்ளதா என்று பார்க்க வேண்டும். குறிப் பாக வழக்கறிஞர்கள், கணக்காளர்கள் மற்றும் கட்டடக்கலைஞர்களுக்கு என தனி அமைப்புக்கள் உண்டு. அரசாங்க பாடசாலைபகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரசின் உரிய பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

ஆனால் ,உங்கள் தொழிலின் தரத்தை தீர்மானிக்கவழிமுறைஇருக்கிறதாஎன்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். குறிப்பாக நீங்கள் தொழிலின் தரத்தைப் பாதுகாக்க விரும்பினால், தொடர்புடைய தரங்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியம். இந்த தரநிலைகளைபராமரிக்கசரியானகட்டமைப்பு இருக்க வேண்டும். உங்களுக்கு அவ்வாறான ஒன்று இருக்கின்றதா? அவ்வாறானஒன்று இல்லை என்று நான் நம்புகிறேன்.



உங்களுக்கு என்.வி.கியு. தரசான்றிதழ்கள்வழங்கப்பட வேண்டும். அப்போது உங்களது தொழிலுக்கு தர நிலை ஏற்பட முடியும் . இதனை நாம் செய்வோம். கிராமத்தில் முன்பள்ளி ஆரம்பிக்க நினைத்த போது சில பிள்ளைகளைக் கூட்டி முன்பள்ளியை ஆரம்பித்த சம்பவங்களை நாம் பார்த்திருக்கிறோம். ஆரம்பக் கல்வி என்பது நம் பிள்ளைகள் தங்கள் குழந்தைப் பருவத்தை மேப்படுத்தும் இடம். அங்கு பிள்ளைகள் சரியாக முன்னெடுக்கப்படவில்லை என்றால், நம் நாட்டின் எதிர்காலம் தவறான வகையில் கட்டமைக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பிள்ளை பருவத்திலிருந்தே குழந்தையின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குழந்தைஉளவியலைஅறிந்தவகையில், ஒரு பிள்ளையைஎப்போதும்மிகவும்கூர்மையாகப் பார்க்க வேண்டும். என்பது உங்களுக்குத் தெரியும். சிறுவயதிலேயே குழந்தைகளின் மனதில்நிலைகொள்ளவேண்டியவிடயங்கள் அவர்களது மனதில் பதியாமல் போனால் பெரும் அழிவு ஏற்பட வாய்ப்புள்ளது. எமது கல்வி முறை பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது, அதன் பிறகு தொழில் கிடைக்க வேண்டும் வேண்டும். அங்கே, டாக்டரோ, இன்ஜினியரோ என்பதைத் தவிர வேறு எதையும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத பிள்ளைகளே உருவாக்கப்பட்டனர், இதே நடைமுறை எழுபத்தைந்து ஆண்டுகளாக இந்த நாட்டில் இடம்பெற்றது. நாடு வளர்ச்சியடையவில்லை என்று நாம் குற்றம் சாட்டுகின்றோம் எமது பிள்ளைகள் நாட்டில் ஒரு தொழிலதிபராக மாற வேண்டும் என்று நாம்கல்விமுறையைமுன்னெடுக்கவில்லை. ஒரு நல்ல தொழில்முனைவோர், ஒரு நல்ல தயாரிப்பாளராக, சுயதொழில் தொடங்கி உலக தொழில் துறையில் முந்திச் செல்லும் கல்வியைநாம்முன்னெடுக்கத்தவறிவிட்டோம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உலகம் முழுவதும் பேசப்படும் தொழில் நுட்பத் துறைக்கு பிள்ளைகளுக்கான அடிப்படையைமுன்னெடுக்கும்ஒருவராகமுன்பள்ளி ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்று நினைக்கும்அடிப்படை அடித்தளத்தைநாங்கள் உருவாக்கவில்லை. எனவேதான் கல்வி முறையும் அதற்கு ஏற்றவகையில் மாற்றப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

முன்பள்ளிஆசிரியர்கள்விளையாட்டுமைதானத்தை மிகச்சிறப்பாகப் பயன்படுத்துவதோடு, பாலர் பாடசாலையில் பல்வேறு செயற்பாடுகள் மூலம் பிள்ளைகளின் மனதை பரந்துபட்ட அறிவை நோக்கிய ஈட்டு செல்ல பெரும் முயற்சியை மேற்கொள்கின்றனர். நாங்கள் அதை நன்றாகப் பார்த்தோம். முன்பள்ளி ஆசிரியர்கள் வண்ணத் தேர்வு மற்றும் எண் தேர்வு போன்ற செயல்பாடுகள் மூலம் பிள்ளைகளை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு இட்டுச்செல்ல முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் முதலாம் ஆண்டுக்குப் போனவுடனே பிள்ளை வேறு திசையை நோக்கி வழிநடத்தப்படுகின்றார்கள் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷநாணயக்கார தெரிவித்தார். (05)

# இலங்கையில் இருந்து கடத்தப்பட்ட தங்கம் தமிழ்நாட்டில் மாட்டியது

## நால்வர் தப்பியோட்டம்



இலங்கையில் இருந்து படகு மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2.20 கோடி ரூபா மதிப்பிலான 3.5 கிலோ கடத்தல் தங்கம் பாம்பன் அருகே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்திய மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இதன் போது புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் ஒரு நாட்டுப் படகு சந்தேகத்திற்கிடமாக இந்தியா பாம்பன் அருகே நின்றது.

அதனையடுத்து படத்திலிருந்து நான்குபேரும்கரையைநோக்கிவரும் போது மறைந்து இருந்த அதிகாரிகள் அவர்களை பிடிக்க முயன்ற போது தாங்கள் கொண்டு வந்த பொதியை படகில்விட்டு கடலில்குதித்துதப்பினார்.

பின்னர்கடலில்நிறுத்தப்பட்டிருந்த படகை சோதனைசெய்தபோது அதில் சுமார் 3.5 கிலோ கடத்தல் தங்கக் கட்டிகள்இருந்ததுகண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து கடத்தலுக்கு பயன்படுத்தியநாட்டுப்படகைபறிமுதல்செய்த சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை ராமேஸ்வரம் சுங்கத்துறைஅலுவலகத்தில்கொண்டு சென்று சோதனை செய்தனர்.

மேலும் தப்பி ஓடியவர்கள் குறித்து சுங்கத்துறை மற்றும் பொலிஸாரிடம் தகவல்கொடுத்துஅவர்களைதீவிரமாக தேடி வருவதோடு, தொடர்ந்து தப்பியோடியவர்கள் மற்றும் கடத்தலில் தொடர் புடைய நபர்கள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்பு சுமார் 2 கோடி 20 லட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினரால் பறிமுதல் செய்த படகை மண்டபம் சுங்கத் துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதிகாலையில் பாம்பன் அருகே கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(05)

# மனைவியை கதிரையில் கட்டிவைத்து தீ வைத்த கணவன் கொல்ல முயன்ற வழக்கில் மறியலில்

மனைவியை தீயிட்டு எரிக்க முயற்சித்தமை மற்றும் தனது மைத்துனரை கத்தியால் குத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை டிசெம்பர் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

அம்பலாங்கொடரண்தொம்பே பகுதியைச்சேர்ந்த தினுஷ நுவன் கொடிதுவக்கு என்ற நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபர் மனைவியின் சகோதரரான மைத்துனரைகுத்திக்கொலைசெய்த வழக்கு விசாரணை பலப்பிட்டிய நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மனைவியின் தம்பியைக் கொலை செய்தமை தொடர்பில் மனைவியின் தாயார் சாட்சியம் வழங்கக்கூடாதென மிரட்டியே, மனைவியை அறையொன்றில்வைத்து, நாற்காலியால் கட்டி வைத்து, தலையணை, போர்வைகள் போன்றவற்றால் மூடிவைத்து தீ மூட்ட குறித்த நபர் தயார் செய்தார் என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களால் வழங்கிய சாட்சியங்கள் உறுதியானதையடுத்து அவரது மனைவியைக் கொல்ல முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அம்புலுவாவவில் முதல் கேபிள் கார் திட்டத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்து



மத்தியமலைநாட்டில்கம்பளை பிரதேசத்தில் அமைந்துள்ள அம்புலுவாவவில் இலங்கையின் முதல் கேபிள் கார் திட்டத்திற்கான ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்காக அம்பர் அட்வென்ச்சர் நிறுவனத்துடன் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (இலங்கை மதிப்பில் 147 கோடி) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கை முதலீட்டுச்சபை அறிவித்துள்ளது. அம்புலுவாவ உயிர்பல்வகைமை மையத்துடன் இணைந்து இந்த ஒப்பந்தம்கைச்சாதிடப்பட்டுள்ளது.

சீனா மெஷின்-பில்டிங் இன்டர்நேஷனல்காப்பரேஷனின் தொழில்நுட்ப மற்றும் தயாரிப்பு நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி இலங்கையின் முதல் கேபிள் கார் நிர்மாணிக்கப்படும் என இலங்கை முதலீட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

அம்புலுவாவ 14 ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த நான்காம் புவனேகபாகு மன்னனால் கண்டுபிடிக்கப்பட்ட பாறை மற்றும் மலைத்தொடராகும். பல்லுயிர் வளங்களைக் கொண்ட இயற்கை மையமாக திகழும் இந்த மலைச்சிகரம் 365 அடி உயரத்திலும் கம்பளை நகரத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளது. இம்மலைச்சிகரத்தில் அனைத்து மதஸ்தலங்களும் ஒன்றாக காணப்படுவது தனிச் சிறப்பம்சமாகும். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொழிலாளர் சட்டங்களைத் திருத்துதல்

**தேவைக்கதிகமாக வீங்கிப் பெருத்துள்ள பொதுத்துறையின் தொடர்ச்சியான மறுசீரமைப்பை நோக்கமாகக் கொண்டு, புதிய தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றனர். இலங்கையின் தொழிலாளர் சட்டங்கள் பெரும்பாலும் அரச துறையைப் போலவே பழமையானவை மற்றும் பயனற்றவை என்று அழைக்கப்படுகின்றன.**

**வரவுள்ள சீர்திருத்தங்கள் பெரும்பாலும் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கும் என்ற கண்டனங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இலங்கையில் தொழிற்சங்கங்கள் குறித்த சட்டங்கள் தனியார் துறையைப் போலவே அரச துறையினருக்கும் பொதுவானது. இதனால் அரச துறையில் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று சொல்லப்படுகின்றது. குறிப்பாக அரசதுறைகளில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு, வளர்ச்சிப் பணிகளை இந்தத் தொழிற்சங்கங்கள் தடுக்கின்றன என்கிற குற்றச்சாட்டு உண்டு. உதாரணமாக எரிசக்தித்துறை (பெற்றோலியம்) மற்றும் மின்சார சபை ஆகியவற்றில் காணப்படும் தொழிற்சங்கங்கள் அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்துள்ளன என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. இதனால் சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து மாற்றங்களை ஏற்படுத்த ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர்.**

**தற்போதுள்ள, சட்டத்தின்படி, எந்த ஒரு அரசு நிறுவனத்திலும், ஏழு உறுப்பினர்கள் கூட்டாக இருந்தால், அவர்கள் ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கலாம். இனிமேல் அது, 25–100 ஊழியர்கள் இருந்தால் மட்டுமே தொழிற்சங்கங்களைத் தொடங்க முடியும் என்று மாற்றப்படவுள்ளது. தொழிலாளர் அமைச்சகத்தின் கூற்றுப்படி, எதிர்காலத்தில் தொழிற்சங்கத்தின் செயற்குழு வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்யும் போது, அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உறுப்பினர்களிடையே கருத்துக் கணிப்பை நடத்தி அவர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும். வேலைநிறுத்தத்திற்குப் பின்னால் உள்ள காரணத்தை ஆதரித்து 50 சதவீதம் பேர் வாக்களித்தால் மட்டுமே வேலை நிறுத்தம் மேற்கொள்ள முடியும்.**

**இலங்கையில் முதன்முறையாக மகப்பேறு விடுப்பு முறையை ஏற்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை தயாரிப்பதும் இந்தச் சீர்திருத்தத்தின் நோக்கங்களில் ஒன்று. நவீன உலகிற்கு பொருந்தாத தொழில் சட்டங்களை மாற்றியமைத்தல். மேலும், புதிய சட்டம், ஊழியர் கொடுப்பனவுச் சசைபயின் கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, எதிர்காலத்தில், பணியிடத்திலும் அனைவருக்கும் துன்புறுத்தலைத் தடுக்கும் வகையில் அனைவரையும் சமமாக நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாலியல் வன்முறையின் வடிவங்கள். பணியிடத்தில் பாகுபாடு காட்டப்படுவதை தடுக்கும் வகையில் சட்டங்களை கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.**

**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஆலோசகர் ஷான் யஹம்பத், கொழும்பில் நேற்று (29) இடம்பெற்ற பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய போது, புதிய சட்டம், முன்னர் இல்லாத வகையில், செயற்படாத அரச ஊழியர்களை பணிநீக்கம் செய்வதற்கு வழிவகை செய்யும் எனத் தெரிவித்தார். எனவே, புதிய தொழிலாளர் சட்டங்கள் மாநிலத் துறைக்கு முக்கிய செயல்திறன் குறியீடுகளை (KPIs) அறிமுகப்படுத்தி, தேவையற்றவர்களை நீக்கும்போது அதன் செயல்திறனை மேம்படுத்த உதவும் என்ற எதிர்பார்க்கப்படுகிறது. அரச துறையின் திறமையின்மை இதன் மூலம் ஒரு முடிவுக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**யஹம்பத் கூறினார், “இந்த நாட்டில் விவாகரத்து பெறுவது எளிது, ஆனால் ஒரு பணியாளரை பணிநீக்கம் செய்வது அவ்வளவு எளிதல்ல, குறிப்பாக ஒருவர் செயல்படாதபோதுகூட அவரைப் பணி நீக்கம் செய்ய முடியாது. புதிய சட்டம் அதில் மாற்றங்களைக் கொண்டுவரும்” என்றார்.**

**புதிய சட்டங்கள் ஊழியர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஐந்து நாள் வேலை வாரம் மற்றும் நெகிழ்வான வேலை நேரங்களை அறிமுகப்படுத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இரவு நேரங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.**

**தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தவிர்ந்த இந்த யோசனைகள் பெரும்பாலும் வரவேற்புக்குரியவையாகவே இருக்கின்றன. என்றாலும், சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரவதால் மட்டும் பயனில்லை. அவற்றை முறைப்படி நடைமுறைப்படுத்தும் அரசியல் விருப்பமும் இருக்கவேண்டும். அரசியல் சலுகைகளும் அங்கு நிகழும் ஊழலுமே சட்டங்களைவிடவும் பொதுப் பணித்துறையை மோசமாகப் பாதிக்கின்றன என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.**

# நிழலா, நிஜமா?

என் சத்திய மூர்த்தி

இதோ, இதோ என்று அறிவிக்கப்பட்ட 'துவாரகா புறப்பாடு' புஸ்வாணமாகப் போய் விட்டது. எந்த இலங்கைவாழ் தமிழ் மக்களுக்காக அந்த பூதம் புறப்பட்டதோ, அதனை அந்த மக்களே உண்மை என்று கருதவில்லை. அதன் காரணமாகவும், நாட்டிலுள்ள தமிழ் செய்திப் பத்திரிகைகளில் பலவும் அந்த நிகழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தொடர்ந்து முதல் பக்க செய்தியாகவும் வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு கட்டியம் கூறுவது போல் பிரபாகரனின் மகள் துவாரகா, உலகின் ஏதோவொரு மூலையில் இருந்து, தமிழ் மக்களுக்கு உரை விடுப்பார் என்று கூறப்பட்டது. அதன் பின்னால், அரசின் புலனாய்வு அமைப்புகள் இருப்பதாகவும் சமூகவலைதளங்களில் செய்திகள் கசிந்தன. ஆனால், இரண்டுமே உண்மை இல்லை என்பதை பிற நிகழ்வுகள் உணர்த்தின.

உதாரணத்திற்கு, இந்த 'துவாரகா புறப்பாடு' நிகழ்வை, தமிழர் தரப்பினரில் ஒரு தரப்பினராவது நம்பினார்கள். அவ்வாறு நம்பினார்களோ இல்லையோ, அடுத்தவர்களை நம்ப வைக்க பிரம்ம பிரயத்தனம் செய்தார்கள். அவர்களே, உலகின் பல்வேறு நாடுகளிலும் அந்த வீடியோ ஒலிபரப்பை பொது நிகழ்வாகவே நடத்திக் காட்டினார்கள்.

அவ்வாறுதான், அண்டை நாடான இந்தியாவின் தமிழ் நாடு தலைநகர் சென்னையில் அரங்கேறிய துவாராகவின் உரை நிகழ்வில் பேசிய கவிஞர் காசி ஆனந்தன், பிராபகரனின் மகள் என்று தூக்கி பிடித்த பெண் பிம்பத்தை, 'தலைமகள்' என்றெல்லாம் திருப்பி, திருப்பி கூறி, அதனை பிறர் ஏற்றுக் கொள்ள பிரம்ம பிரயத்தனம் செய்தார். இது போன்று. தங்களை இன ஆர்வலர்கள் என்று கூறிக்கொண்வோர், பிராபகரன் குடும்ப அங்கத்தவரின் பெயரோ, பங்களிப்போ இல்லையென்றால், வரும் காலங்களில், இனப்போராட்டம் நீர்த்துப் போய்விடும் என்று கருதுவதாகவே தோன்றுகிறது.

தெளிவாக, உறுதியாக

இதில் கொடுமை என்றவென்றால், இந்த பெண் பிம்பம் துவாரகா இல்லை என்று கூறும் தமிழர் தரப்புகள், செயற்கை நுண்ணறிவு என்று அறியப்படும் 'ஆர்டிபிஷியல் இன்டலிஜன்ஸ், அதன் உள் கூறான டீப்பேக்ஸ் (deepfakes) போன்ற தொழில்நுட்பத்தின மூலமே அந்த உரை உருவாக்கப்பட்டது என்கிறார்கள். இதற்கு, அண்மையில் டீப்பேக்ஸ் முறையில் உருவாக்கப்பட்டு சமூக வலைதளங்களில் ஒரு சுற்று வந்த தென்னிந்திய திரைப்பட நடிகை ராஷ்மிகா மந்தனாவின் முகம் தாங்கிய ஆபாச வீடியோ பதிவை ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

ஆனால், துவாரகாவாக அபிநயித்தவர் உயிருள்ள வேறு ஒரு பெண் என்று கூறி, ஒருவருடைய புகைப்படத்தை, சில தமிழர் தரப்புகள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார்கள். ஆனால், அவர்கள் அனைவருமே, அன்று வீடியோ ஒளிப்பதிவில் பேசியவர் பிரபாகரனின் மகள் அல்ல என்பதில் தெளிவாக, உறுதியாக உள்ளனர்.

அமெச்சூர் முயற்சி

எது எப்படியோ, துவாரகா விவகாரத்தை அரங்கேற்றியவர்களிடம் விடுதலை புலிகள் இயக்கத்தின் நம்பகத்தன்மை வெளிப்படவில்லை. உளவியல் போரில் விடுதலை புலிகளின் தேர்ச்சியும் தன்னம்பிக்கையும் தெரியவில்லை. ஒட்டுமொத்தமாக, பேச்சாளர் துவங்கி, அவரது பேச்சுதிறமை மற்றும் தொழில்நுட்பம் வரை, அனைத்துமே சிறுபிள்ளை விளையாட்டாக, அமெச்சூர் தனமாக இருந்தது.

குறிப்பாக, தமிழர்களின் 'தலைமகள்' என்றெல்லாம் போற்றி புகழப்பட்டவரின் பேச்சுதிறமை எந்தவிதத்திலும் உணர்ச்சிபூர்வமாக இருக்கவில்லை. இளையதலைமுறை தமிழர்களை கவர்வதாகவும் அமையவில்லை. இன்னும் சொல்லப்போனால். 'திவசமந்திரம்' அளவிற்கு எந்தவித ஏற்ற, இறக்கங்களும் இல்லாமல் இருந்தது.

உண்மையிலேயே துவாரகாவாக இருந்து, அவருக்கு பேச்சுதிறமையே எள்ளளவும் இல்லை என்றால் அது ஒரு விடயம். அதனைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அது துவாரகாவாக இருந்து, அவருக்கு இனப்பிரச்சினையில் அதீத கவனமும் கவலையும் இருந்திருந்தால், அது அவரது வசனங்களில் வெளிப்பட்டிருக்கும். அவரே எழுதி வைத்து படித்திருந்தாலும், அதிலும் ஒரு உணர்வு மற்றும் உள்ளுணர்வின் வெளிப்பாடும் பொதிந்திருக்கும்.

ஆனால், அந்த உரை, தொடக்கம் முதல் கடைசி வரை உப்புசப்பு இல்லாமலே இருந்தது. என்ன, வருடாந்தம் பிரபாகரனின் மாவீரர் உரையின் ஒவ்வொரு வசனத்திற்கும் அர்த்தம் கற்பித்து பழகிப்போன, உலகளாவிய தமிழினமும் சரி, அதனை வார்த்தைக்கு வார்த்தை எடை போட்டு பழகிப்போன இலங்கை அரசு தரப்பும் சர்வதேச சமூகமும் கூட கடனே என்று இந்த உரையையும் கடைசிவரை கேட்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள்.

குறிப்பாக, அந்த உரையில் கடந்த காலம் குறித்த புதிய குறிப்புகளோ, நிகழ்காலம் குறித்த பெருத்தகவலைகளோ, எதிர்காலம் குறித்த எந்தத் திட்டங்களுமோ இருக்கவில்லை. இதே வகையில், அடுத்தடுத்த வருடங்களிலும் மாவீரர் உரை என்ற பெயரில் வீடியோ வெளிவந்தால் அதனை காண்பதற்கு யாரும் தயாராக இருக்க மாட்டார்கள் என்பதே யதார்த்தம்.

இதற்கு அப்பால், வீடியோ தொழில்நுட்பம் எங்கேயோ போய்விட்ட சமகாலத்தில், மிகவும் மோசமான படபிடிப்பு அதிகமாக எரிச்சலூட்டுகிறது. அல்லது, சிறப்பான தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த உரை பதிவு செய்யப்பட்டிருந்தால், குட்டு எளிதில் வெளிப்பட்டுவிடும் என்ற கவலையோ என்று தெரியவில்லை.

அதீத வன்மம்

சரி, தற்போது இந்த 'துவாரகா வெளிப்பாடு' மூலம் தமிழர்களுக்கு கிடைக்கப்போவது என்ன? மிஞ்சப்போவது தான் என்ன? இந்த வெளியீட்டின் உண்மை தன்மையையும், சாராம்சத்தையும் நாட்டில் வாழும் தமிழர் தரப்பு ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், இதனை முன்வைத்து, தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகள், தமிழர்களின் மீது அதிக, அதீத வன்மத்தைகட்டவிழ்த்துவிடலாம்.

கடந்த கோட்டபாய ஆட்சி தொடக்கம், தமிழர்களின் புராதான கலாச்சார அடையாளங்களான கோவில்களும் அவை சார்ந்த நிலங்களும் மலைபகுதிகளையும்கூட, சிங்களவர்களின் தொல்பொருள் அடையாளங்கள் என்று அரசே கையகப்படுத்தி வருகின்றது, அவற்றிற்கான முயற்சிகளும் நாளாந்தம் தொடருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, நாடாளுமன்றத்தின் உள்ளிலும் வெளியேயும், தமிழர் தரப்பிற்கான எதிரான சிங்கள பேரினவாத உரைகளும் அவை சார்ந்த முயற்சிகளும் தொடர்கின்றன. இப்போது, இந்த துவாரகா பெயரிலான விளையாட்டால், இது போன்ற நடவடிக்கைகள் அதிகமாகலாம். தமிழர்களின் கலாசார அடையாளங்களை இந்தத் தலைமுறையிலேயே முற்றிலுமாக அழிப்பதற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படலாம்.

அது போன்றே, களபணியில் ஈடுபட்டிருக்கும், இராணுவத்தினரும், பொலிசாரும்கூட தமிழர்களை தற்போதையைவிட அதிக அடக்குமுறைகளுக்கு ஆளாக்கலாம். இனப்போர் காலத்தினை போல், தமிழ் சமூகமே மீண்டும் அவர்களின் சந்தேக வலைக்குள் பின்னப்பட்டு நாளாந்தம் துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகலாம்.

ஆனால், இதன் மூலம் எல்லாம், எழுபதுகளில் தமிழ் இளைஞர்கள் போராளி குழுக்களை அமைத்து, அவற்றின் மூலம் ஆயுத பயிற்சியும் எடுத்து, அரசையும் அரசின் படையினரையும் எதிர்த்து போராடிய காலத்தை மீண்டும் உருவாக்கலாம் என்று யாராவது நினைத்தால், அது தவறான முன்னெடுப்பு. அதிலும் குறிப்பாக, இத்தகைய எண்ணம், புலம்பெயர்ந்தோரிடையே தோன்றியிருந்தால், அது வெற்றிபெறாது.

தற்போதைய களநிலையில், இது போன்ற தந்திரோபாயங்களுக்கு வீழாமல், தமிழ் இளைஞர்கள், எப்படியாவது ஒரு வெளிநாட்டிற்கு சென்றடைந்து அங்கு அரசியல் புகலிடம் கேட்கவே முயற்சிப்பார்கள். தற்போது வெற்றி அடையாத அவர்களது முயற்சிகள் அப்போது கனியலாம். கடந்த எழுபதுகள் தொடங்கி தொண்ணூறுகள் வரையில், தமிழ் இளைஞர்கள் இவ்வாறுதானே மேலை நாடுகளில் அரசியல் தஞ்சம் பெற முயற்சித்து அதில் பெருவாரியாக வெற்றியும் அடைந்தார்கள்?

இன்னோரு முறை இனப்போர் எந்த உருவத்தில் அரங்கேறினாலும், தமிழினத்தையே அழித்தொழிக்க அரசும் படையணிகளும் தயங்காது. அவ்வாறு இல்லாமல், விரக்தியில் அடுத்தடுத்த தலைமுறையினர், அரசியல் அகதிகளாக மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்தால், உள்நாட்டில் தமிழர்களின் எண்ணிக்கை அதுவாகவே குறைந்துவிடும். இப்போது கூட, உள்நாட்டை விட வெளிநாடுகளிலேயே அதிக தமிழர் குழந்தைகள் பிறக்கின்றன என்று சர்வதேசச சமூகத்தினர் சிலர் பகடி பேசுகிறார்கள். இது தானே, சிங்கள-பௌத்த பேரினவாதிகள் விரும்புவது!

இந்த உண்மையை அறியாமலோ, அறிந்தும் அறியாமலோ, விடுதலை புலிகள் அமைப்பு செயல்பட்டதால்தான், இனப்போரின் கடைசி கட்டங்களில் அரச படையினருக்கு சமமாக போராளிகள் இருக்கவில்லை. தொடர்ந்து பயிற்சி அளித்து முன்னிலைக்கு வந்த தளபதிகளை எல்லாம், விடுதலை புலிகள் அமைப்பின் தலைமையே கருவறுத்தது. அல்லது, அவர்களை மாவீரர்கள் என்று பிரகடனப்படுத்த களப்பலி கொடுத்தது.

அதேசமயம், எழுபதுகளில் சம்பிராதயத்திற்கு என்று மட்டுமே செயல்பட்டு வந்த அரச இராணுவம் எண்ணிக்கையிலும், போர் திறமையிலும் எங்கோ போய்விட்டது என்ற உண்மையும் விடுதலை புலிகள் அமைப்பின் தலைமைக்கு உறைக்கவில்லை. அது போன்றே, 2001 அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதலுக்கு பின்னரான தீவிரவாதம் குறித்த மேலைநாடுகளின் எண்ண வோட்டத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

எது எப்படியோ, துவாரகா பெயரிலான நாடகங்களும் அவை சார்ந்த நடவடிக்கைகளும் நாட்டில் வாழும் தமிழர்களுக்கு அவர்களது உரிமைகளை பெற்றுத் தரப்போவதில்லை. அதேசமயம், அவர்களது அமைதியான வாழ்வு இம்மட்டிலாவது தொடர்வதற்கும் வழிவகுக்கப் போவதில்லை!

காலைக்கதிர் Kalaikkathir

# புதுக்குடியிருப்பில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய போதைக்கு அடிமையானவர் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞனை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர் .

குறித்த இளைஞன் 29 வயதுடைய கைவேலி பகுதியைச் சேர்ந்தவர் எனபதுடன் போதைக்கு அடிமையானவர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவரல் களவாடப்பட்ட 16 காஸ்சிலிண்டர்கள், ஒரு தண்ணீர் மோட்டார், ஒரு மிதிவண்டி, வயர் ரோல்கள், கதிரைகள், தங்கசங்கிலி உள்ளிட்ட பெருமளவான பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தனிமையில் வசிக்கும் வயோதிபர்களின் வீடுகளுக்கு செல்லும் குறித்த இளைஞன் அங்கு காணப்படும் காஸ் சிலிண்டர்களை களவாடுவதுடன் தங்க நகைகளைத் திருடிச்சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றை விற்று போதைப் பொருள்கள் வாங்குவதற்கு பயன்படுத்தி வருவதாக விசாரணைகள் தெரிய வந்துள்ளது.

இதேவேளை புது குடியிருப்பு பிரதேசத்தில் பல வீடுகளில் காஸ் சிலிண்டர் களவாடப்பட்டுள்ளமை தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம் கே கேரத் தலைமையிலான குழுவினர்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு குறித்த இளைஞனை கைது செய்துள்ளதுடன் களவாடப்பட்ட பொருள்களில் ஒரு தொகுதியினையும் மீட்டுள்ளார்கள். இந்தக் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரை கைது செய்துள் ளதுடன் ஓட்டோ ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களையும் சான்று பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் புதுக் குடியிருப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெப்ப வலய நாடுகளுக்கு கடுமையான நெருக்கடிகள்

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

வெப்பவலய நாடுகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுற்றுச்சூழல் நிகழ்ச்சி நிரல் தற்போது மாறி வருகின்றது. இன்று உலகிலுள்ள ஒவ்வொரு தளத்திலும் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை பிரதான தலைப்புகளாகும்.

ஆனால் இன்றைய நிலவரப்படி சுற்றுச்சூழல் தொடர்பான கலந்துரையாடல் முன்னிலைக்கு வந்துள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கிய காரணம் சுற்றுச்சூழல் குறித்து சரியான கவனம் செலுத்தப்படாமையாகும். மனிதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடு கணக்கிட முடியாதது.

கைத்தொழில் புரட்சியின் போது சுற்றுச்சூழலில் சரியான கவனம் செலுத்தாததன் விளைவை இன்று அனுபவித்து வருகிறோம்.

2015 ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை. அதனால் வெப்ப வலய நாடுகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் செயற்பாடுகளால் வெப்பவலய நாடுகள் பாரிய நட்டத்தை சந்தித்துள்ளன.

எனவே ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டையும் மிஞ்சிய பெறுமதி இம்முறை மாநாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதிப்பு எதிராக வலுவான சூழலை கட்டமைக்க வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது. - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஈட்டிய மேலதிக நிதி ஜனாதிபதியிடம் வழங்கி வைப்பு



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இவ்வருடத்தில் 7 பில்லியன் ரூபாக்களை திறைசேரிக்கு வழங்கியுள்ள நிலையில், அதில் 4 பில்லியன் ரூபாவுக்கான காசோலை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு அவசியமான மருந்துப் பொருள்கள் கொள்வனவு, அரசஊழியர்களின் சம்பளகொடுப்பனவு, உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஈட்டிய மேலதிக நிதியே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி 07 பில்லியன் ரூபாவில் 3 பில்லியன் ரூபா ஏற்கனவே ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டதோடு, அதற்கு இணையாக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காகவும் 100 மில்லியன் ரூபா வழங்கப் பட்டது.

இதற்கு முன்னரான காலப்பகுதிகளில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறைசேரிக்கு 3382 மில்லியன்களை வழங்கியிருந்தாலும் ஒரே வருடத்தில் 7 பில்லியன் ரூபாவை வழங்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர். பி. ஏ. விமலவீர, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் ஹில்மி அஸீஸ் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்





தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# கொக்குவில் நாமகள் வித்தி மாணவர்களுக்கு லயன்ஸ் கழகத்தால் பாடசாலை உபகரணம்










கொக்குவில் நாமகள் வித்தியாலய மாணவர்கள் சகலருக்கும் லயன்ஸ் கழகத்தினரால் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்லூரி முதல்வரும் லயன்ஸ் கழக ஆளுநர் சபையின் ஆலோசகருமான லயன் ஜெ.ரஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை உபகரணங்களை, மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம்பீற்றர், அகில இலங்கை லயன்ஸ் கழகங்களின் முன்னாள் தலைவர் லயன் தேவா டி பீற்றர் ஆகியோர் கலந்து மாண வர்களுக்கு வழங்கிவைத்தனர்.

லயன்ஸ் கழக ஆளுநர் சபையின் ஆலோசகர் லயன் ஐ.மயூரதனின் நிதி அனுசரணையில் நடைபெற்ற இந்த உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டத்தை உரும்பிராய் லயன்ஸ் கழகமும் யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழகமும் இணைந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். பல்கலைக் கல்லூரி கண்காட்சி நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி (university college) மாணவர்களின் தொழிநுட்பக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது.

ரெக்டோபியா (Tectopia) - 2023 எனும் தொனிப்பொருளில் தொடங்கப்பட்ட இந்தக் கண்காட்சி இன்றும் இடம்பெறும்.

கண்காட்சியின் தொடக்க நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியை நாடாவெட்டி திறந்து வைத்தனர்.

இக்கண்காட்சியை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்


















4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir





# சைவ வழிபாட்டு மரபுகள்



இந்து மதத்தில் ஆறு வகை சமயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சைவமும் ஒன்றாகும். ஒவ்வொரு சமயங்களுக்குமென பல்வேறுபட்ட வழிபாட்டு மரபுகள் காணப்படுகின்றன. பழங்காலம் தொட்டு இக்காலம் வரையிலும் சைவ வழிபாடுகள் சிறந்த ஒன்றாகத் திகழ்கின்றன. சனாதன தர்மத்தினை அடிப்படையாகக்கொண்டு வழிபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கடவுள்களுக்கும் எனப் பல வகையான வழிபாட்டுமரபுகள்காணப்படுகின்றன. ஆகமம் சார்ந்த வழிபாடு, ஆகமம் சாராத வழிபாடு என ஆகம ரீதியில் இருவகைப்படுத்தப்படுகின்றது.

ஆகமம்சார்ந்தவழிபாடானதுஆலயங்களில் இடம்பெறும் கிரிகைகளையும் விக்கிரகங்கள் தொடர்பான வழிபாட்டு முறையையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன.




ஆகமம் சாராத வழிபாடானது நேர்த்தி வைத்தல், காப்புக்கட்டுதல் போன்ற மக்களின் நம்பிக்கைகள் மற்றும் மரபுகள் வழியாக மேற்கொள்ளப்படுகின்றது. திருவிழாக் காலங்களில்நடைபெறும்கிரியைகள்,பூசைகள், மகோற்சவம் போன்ற சைவ வழிபாட்டு மரபு வழிவந்தவையாகும். விரதங்களைக் கடைப்பிடித்து இறைவனை அடையும் முறைகள் இவற்றினுள் அடங்குகின்றன. அவ்வாற வழிபடும் முறைகள் ஆகமம் சார்ந்தவழிபாட்டுமரபுகளாகும்.

கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் தமது பண்பாடு கலாசாரம் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மரபுகளை அடிப்படையாகக்கொணடு தமக்கென வழிபாட்டு முறைகளை உருவாக்குகின்றனர். இந்த வகையில் தமது கோரிக்கைகளை நிறைவேறும் பொருட்டு கடவுளுக்கு நேர்த்திவைத்தல், தீமிதித்தல், மண்சோறு உண்ணுதல் போன்ற சடங்குகளை ஆற்றுகின்றனர். ஐயனார், காளி. முனி போன்ற கிராமம்புறத் தெய்வங்களிற்கு மாமிசம் படைத்த வழிபடும் வழிபாட்டு மரபுகளும்கூட உள்ளன.

சிந்துவெளிக் காலத்தில் வனதேவதை வழிபாடும் சிறப்பாக இடம்பெற்றது. கிராமம்புற மக்களின் வழிபாட்டு முறைக்கு உதாரணமாக அமைகின்றது. இவ்வாறு கிரம மக்களின் வழிபாட்டு மரபுகள் ஆகம நெறி சாராத வழிபாட்டு வகைக்குள் அடங்குகின்றன.

ஆகமம் சார்ந்த வழிபாடுகளில் வழிபாட்டு மரபுகள்சாஸ்திரங்களையும்புராணங்களையும் அடிப்படையாகக்கொண்டேஇடம்பெறுகின்றன. ஆலயங்களில் ஆறுகாலப் பூசைகள் இடம்பெறுதல் மகோற்சவ காலங்களில் தேர் இழுத்தல், தீர்த்தம், சப்பரம் இழுத்தல் போன்ற விசேடவழிபாடுகள்பாணப்படுகின்றன. எல்லா நாடுகளிலும் ஆலய வழிபாட்டு முறைகள் விசேடமானவை. ஆலயங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் விக்கிரகங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் வழிபாட்டு மரபுகள் கூறுகின்றன. அதன் அடிப்படையில் இந்தியாவிலுள்ள தங்சைப் பெருவுடையான் கோவில் கோபுரம் மற்றும் கங்கை கொண்ட சோழேஸ்வர கோபுரங்கள் பிரசித்தி பெற்றவையாகக் காணப்படுகின்றன.

விக்கிரக வழிபாடானது சல விக்கிரகம் சலாசல விக்கிரகம் அசல விக்கிரகம் என்ற வகையில் காணப்படுகின்றன. அசைக்கக்கூடிய விக்கிரகம் சல விக்கிரகம் என்றும் அசைக்கமுடியாத விக்கிரகம் அசல விக்கிரகம் எனவும் இசைக்கக் கூடியதும் ஆனால் அசைக்கக்கூடாததுமான விக்கிரகம் சலாசல விக்கிரகம் எனவும் சைவ வழிபாட்ட மரபுகள்கூறுகின்றன. விக்கிரகவழிபாடுகளிலே நடராஜர் வழிபாடு சிறப்பு வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவ்வழிபாடானது சிவபெருமானின் வடிவில் தோன்றியதாகும்.

இவ்வாறாக ஒவ்வொரு கடவுளுக்கும் என வழிபாடுகள் காணப்படுகின்றன. அவையாவன சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, நாகதேவ வழிபாடு, வானதேவதை வழிபாடு, முருக வழிபாடு எனப் பல்வேறு வழிபாடுகள் காணப்படுகின்றன. சிவ வழிபாடானது சிவனுக்கு உரியதாகவும் சக்தி வழிபாடானது உமாதேவிக்குரியதாகவும் நாகதெய்வ வழிபாடு நாகபாம்பிற்கு உரியதாகவும் மக்களால் மெற்கொள்ளப்படுகின்ற வழிபாட்டு மரபுகளாகக் காணப்படுகின்றன. அக்காலத்திலும் சில பிரதே சங்களில் நடைபெறுகின்றது. வனதேவதை வழிபாடும் கிராமப்புறங்களில்நடைபெறும்வழிபாடாகும். முருக வழிபாடானது முருகனுக்குரிய வழிபாடாகவும் காணப்படுகின்றது.

சங்க காலங்களில் வழிபாட்டு மரபானது திணை அடிப்படையில் (நிலம் சார்ந்து) பிரித்து அவற்றிற்குரிய கடவுள்களின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக தொல்காப்பியம் என்ற நூலில் 'மாயோன் மேய காடுறை உலகம்' என்ற பாடலடியைக் குறிப்பிடலாம். ஐவகை நிலங்களாகவே பிரித்து இவ்வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றது. அவையாவன குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்பனவாகும்.

அந்த அடிப்படையில் சைவ வழிபாட்டு மரபுகள் தொன்மை காலத்தினை அடிப்படையாகக்கொண்டேநடைபெறுகின்றன. வழிபாட்டு மரபுகள் இடங்களுக்கு இடங்கள் வேறுபட்டதாக அமைகின்றன.

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று



ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடம் எனப்படும். ஆன்மாவானது மும்மலங்களையும் நீக்கி ஒருங்கும் இடம் ஆலயம் எனப்படும். நாம் அனைவரும் ஆலயத்திற்கு செல்லும்போது நீராடி தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து வீபூதி தரித்து பூசைப்பொருட்களான பூ, வெற்றிலை, பாக்கு, தயிர், பால், பூமாலை, என்பவற்றை கொண்டு செல்லுதல்வேண்டும்.

பசுவின் குருதி பாலாகின்றது. குருதி பசுவின் உடல் முழுவதும் பரந்துள்ளது. ஆயினும் பசுவின் மடியினால்தான் பால் எடுக்கமுடியும். அதேபோன்று உலகம்எங்கும்பரந்துள்ளஇறைவனின் அருள் கிடைக்கும் இடமாக ஆலயம் விளங்குகின்றது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.' என சான்றோர்கள் கூறுகின்றார்கள். ஆலயம் மனித உடல் அமைப்பில் அமைக்கப்படுகின்றது. ஒரு மனிதன்படுத்திருக்கும்உடலமைப்பில்ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன.


மூலஸ்தானம் சிரைசயும், நிருத்த மண்டபம் கழுத்தையும், மகா மண்டபம் மார்பையும், அர்த்த மண்டபம் வயிற்றையும், அடுத்து அமையும் மண்டபங்கள் கால்களையும், இராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன. இராஜகோபுரம் பிரபஞ்சஇயக்கத்தைவிளக்குகின்றது. ஆலயங்களில் மூன்று கிரியைகள் நிகழ்த்தப்படுகின்றன. நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமிய கிரியைகள் ஆகியனவே அவையாகும். நித்திய கிரியை ஆலயத்தில் தினந்தோறும் நடத்தப்படும் கிரியை ஆகும். காமிய கிரியை பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யப்படும் கிரியை ஆகும். நைமித்திய கிரியை பலனை எதிர்பார்த்து செய்யப்படும் கிரியை ஆகும். நிமித்தம் என்ற அடியில் பிறந்தது நைமித்தியம் ஆகும்.

ஆலயசூழலில்நாம்எச்சில்உமிழ்தல், தலைமுடி கோதுதல், வெற்றிலை, பாக்கு, உண்ணுதல் என்பன வேண்டத்தகாத காரியங்களாகும். நாம் ஆலயச்சூழலை மிகவும் தூய்மையாகப் பேணுதல் வேண்டும். இறைவனைவழிபடுவதால்மனநிம்மதி, மனம் ஒருநிலைப்படுதல் என்பன உண்டாகும். ஆன்மாவானது எப்போதும் இறை சிந்தனையுடன் இருக்குமாறு நந்திதேவர் மூலவரை நோக்கி அமர்ந்திருக்கின்றார். கோயிலுக்குச் சென்று இறை உணர்வோடு இறைவனை வழிபட்டால் சகல சௌபாக்கியமும் கிட்டும். எனவே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று கூறப்படுகின்றது. எனவேநாம்ஆலயத்துக்குச்சென்றுஆலயச்சூழலை சுத்தமாக வைத்து இறைவனை மெய்யன்போடு வழிபடுதல்வேண்டும்.

ச.கவிஷாளினி,
இந்து மகளிர் கல்லூரி




## வெலிகந்த – சிங்கபுரவில் விபத்து: 30 பேர் காயம்



வெலிகந்த - சிங்கபுர பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 30 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரிசி ஆலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை காயமடைந்தவர்கள் வெலிகந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு அவர்களில் சிலர் பொலன்னறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

## மட்டு. சிறைச்சாலையிலும் கைதியொருவர் திடீர் சாவு

மட்டக்களப்புசிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்ட சிறைக் கைதியொருவர் திடீரென மரணமடைந்துள்ள சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தைசேர்ந்தமூன்றுபிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் துரைராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையின் போது அவரது உடலில் காயங்கள் உள்ளமை தெரிய வந்துள்ளது. இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## தென்னகோன் நியமனம்; பேராயர் கடும் விசனம்




பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமை ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களை அவமதிக்கும் செயல் என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் எவற்றையும் கருத்திற்கொள்ளாமல் அவருக்கு நியமனம் வழங்கியமையின் ஊடாக மக்களின் பாதுகாப்பின் மீது ஜனாதிபதிக்கு அக்கறை இல்லை என்பதே புலப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அவர், அப்பாவி பொதுமக்கள் உயிரிழப்பதைத் தடுக்க வாய்ப்புக்கள் காணப்பட்டபோதும் அதனை உதாசீனம் செய்ததாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றம் சாட்டை போட்டவரே தேசபந்து தென்னகோன் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் தேசபந்து தென்னகோன் போன்றோர் நாட்டின் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை மிலேச்சத்தனமான செயற்பாடு என்றும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவானதாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# 21 ஆயிரம் மில். ரூபாய் போதைப் பொருள் கடற்படை நடவடிக்கைகளில் 2023 மீட்பு

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சுமார் 21 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கையிருப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 20 ஆயிரத்து 576 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை குறிப்பிட்டுள்ளது.

குறித்த காலப்ப குதியில், 715 கிலோ 509 கிராம் ஹெரோயின் கையிருப்பு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன் அதன் பெறுமதி 17 ஆயிரத்து 887 மில்லியன் ரூபாவாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு, 3 ஆயிரத்து 641 கிலோ 15 கிராம் கேரள கஞ்சாவும், 50 கிலோ 288 கிராம் உள்ளூர் கஞ்சாவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி ஆயிரத்து 456 மில்லியன் ரூபா என கடற்படை தெரிவித்துள்ளது.

அதேநேரம், 10 கிலோகிராம் 755 கிராம் ஐஸ் போதைப்பொருள் கையிருப்பு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 95 மில்லியன் ரூபாவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் ஆயிரத்து 127 மில்லியன் ரூபா பெறுமதியான 140 கிலோகிராம் 993 கிராம் ஹஷிஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள்களுடன் 14 வெளிநாட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் பாகிஸ்தான் பிரஜைகள் எனவும், 6 பேர் ஈரானிய பிரஜைகள் எனவும், மற்றைய 6 பேர் இந்திய பிரஜைகள் எனவும் கடற்படை கூறியுள்ளது.

இதற்கிடையில், இந்த வருடத்தில் போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் வாகனங்களில் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் 215 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டவர்களுக்கு சொந்தமான 3 படகுகளும், உள்நாட்டவர்களுக்குச் சொந்தமான 43 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (05)

## புதிய களனி பாலத்தை மூடுவதற்கு தீர்மானம்

*புதிய களனி பாலத்தை 03 கட்டங்களாக தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*அத்தியவசியமான நவீனமயமாக்கல் பணியால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.*

*இதன்படி, புதிய களனி பாலம் டிசெம்பர் முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையிலும், டிசெம்பர் 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையிலும், டிசம்பர் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலும் தற்காலிகமாக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(05)*

## பரீட்சைக்கு தோற்றும் இளைஞர் உட்பட 7 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது

### கடந்த 2 நாள்களில் மட்டும்

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இளைஞர் உட்பட 7 பேர் கடந்த 2 நாள்களில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்விற்கு வாகனங்கள், ஜெனரேட்டர் மற்றும் ஸ்பீக்கர்களை வாடகைக்குஎடுத்ததற்காக சிலர் கைது செய்யப்பட்டனர், மற்றவர்கள் நவம்பர் 27 அன்று சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகள் மற்றும் ஒலிபெருக்கிகளை கொண்டு சென்றதற்காகக் கைது செய்யப்பட்டனர்.

இதில் பலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாள்களில் மேலும் சிலரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடை சட்டத்தில் பயங்கரவாதம் என வரையறுக்கப்படாத வாகனங்களை வாடகைக்கு எடுப்பது கூட பயங்கரவாதமாக கூறப்பட்டுள்ளதாக அம்பிகா சற்குணநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் நினைவு கூருபவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைப்பது, அரசாங்கத்தின் மீதான தமிழர்களின் அவநம்பிக்கையை மேலும் அதிகரிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.(05)

## நுவரெலியாவில் தபால் நிலையம் முன்பாக தொழிற்சங்க போராட்டம்





பல கோரிக்கைகளை முன்வைத்து நுவரெலியா தபால் நிலையத்தின் ஒன்றிணைந்ததொழிற்சங்கக்கூட்டமைப்பினர், தபால் நிலையத்துக்கு முன்பாக நேற்று (வியாழக்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மதியஉணவுஇடைவேளையின்போதே தபால் நிலையத்தைமூடி, இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'நுவரெலியா, கண்டி, காலி மற்றும் தியதலாவை ஆகிய நகரங்களில் உள்ள புராதன பெறுமதிக்க தபால் நிலையங்களை, குறுகிய கால இலாபத்துக்காக விற்பனை செய்வதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சி நிறுத்தப்பட வேண்டும், தபால் திணைக்களத்தில் நிலவும் ஆளணி பற்றாக்குறைய நிவர்த்தி செய்யப்பட வேண்டும், வரவு - செலவுத் திட்டம் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2016 முதல் தபால் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை எனவும் இதனால் திணைக்களத்தில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன எனவும், எனவே, புதிய நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும் தபால் நிலைய ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(05)

## இறந்த மலி யானைக்குப் பதிலாக புதிய யானை பிலிப்பைன்ஸுக்கு

உலகின் மிகவும் 'சோகமான' யானை எனப் பெயரிடப்பட்ட இலங்கை யானை பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலுள்ள மிருக்காட்சிசாலையில் உயிரிழந்துள்ளது. குறித்தயானைமணிலா மிருக்காட்சாலையில் இருந்த ஒரே ஒரு யானை என்பதால் தனது வாழ்நாளை தனிமையிலேயே கழித்தது.

விஸ்வ மலி என பெரியடப்பட்ட குறித்த யானை பிறந்து 11 மாதங்களில் 1977 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸின் முதல் பெண்மணி இமெல்டா மார்கோஸுக்கு இலங்கை அரசாங்கத்தால் பரிசாக வழங்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு மே மாதம் யானை மணிலா நகரத்தின் பராமரிப்பின் கீழ் வந்தது. இதேவளை, 1977 ஆம் ஆண்டு ஷிவா என்ற மற்றொரு யானையும் மிருக்காட்சாலையில் இருந்தது. அந்த யானை 1990 ஆம் ஆண்டு உயிரிழந்தது.

அன்றிலிருந்து மலி மிருகக் காட்சிசாலையில் இருந்த ஒரே யானையாக தனிமையில் வாழ்ந்து வந்தது. கொரோனா தொற்று பரவல் காலத்தில் மணிலா மிருக்காட்சிசாலை குழந்தைகளுக்கான தடுப்பூசி செலுத்தும் இடமாக செயற்பட்டது. அச்சமயம் மலி யானை குழந்தைகளை மகிழ்வித்தது.

இந்நிலையில், செவ்வாயன்று மலியின் இறப்புக் குறித்து மணிலா மேயர் ஹனி லகுனாவால் பேஸ்புக்கில் அறிவித்தார். அவர் மலியைப் பார்க்க மிருகக்காட்சிசாலைக்குச் சென்றமை அவரது மகிழ்ச்சியான குழந்தைப் பருவ நினைவுகளில் ஒன்றாகும் எனத் தெரிவித்துள்ளார்.

யானையை பிரேத பரிசோதனையில் சில உறுப்புகள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தும், பெருநாடியில் அடைப்பு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், பிலிப்பைன்ஸிற்கான ஒரு பயணத்தின்போது நாட்டிற்கு மலியை கொண்டுவந்த அதே இலங்கை அரசாங்கமே புதிய யானையை வழங்குவதற்கு இணங்கியுள்ளதாக மணிலா மேயர் ஹனி லகுனா பிலிப்பினோவில் புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை, யானையின் எச்சங்களைப் பாதுகாத்து அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்த பிலிப்பைன்ஸ் அரசாங்கம் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## வயதுமுதிர்ந்த தம்பதி வெட்டிப் படுகொலை

### *வவுனியாவில் பரபரப்பு*

வவுனியா செட்டிகுளம் பகுதியில் வயது முதிர்ந்த தம்பதியினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் எனவும், சடலங்களுக்கு அருகில் மூன்று கத்திகள் மீட்கப்பட்டுள்ளதால் அவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த வீட்டில் இருந்து 5 பவுன் பெறுமதியானநகைகாணாமற்போயுள்ளதால்திருட்டில் ஈடுபடும் போது இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என்றகோணத்தில்விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## மின்சார சபை ஊழியர் மின்சாரம் தாக்கி சாவு

### *பதியத்தலாவயில் சம்பவம்*

பதியதலாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மின்சாரம் தாக்கியதில் மின்சார சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பதியதலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் குருணாகல் பன்னல பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடைய மின்சார சபை ஊழியராவார்.

இவர் விகாரை ஒன்றில் இடம்பெற்ற மத வழிப்பாட்டு நிகழ்வொன்றிற்கு மின்சார பணிகளை மேற்கொண்டிருந்த நிலையில் இந்த சம்பவத்திற்கு முகம்கொடுத்துள்ளார் எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதியதலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## முன்னாள் விமானப்படை சிப்பாய் சடலமாக மீட்பு

முன்னாள் விமானப்படை வீரர் ஒருவர் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய முன்னாள் விமானப்படை வீரராவார்.

இவரது சடலம், விமானப்படை வீரர் ஒருவரின் வீட்டுக்கு அருகிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கத்தில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2023இல் வெளியிடப்பெற்றது.